ஒரு குறிப்பிட்ட பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியரின் எண்ணிக்கை அப்பள்ளியின் இடவசதி மற்றும் இதர வசதிகள், அந்தப் பள்ளி அமைந்திருக்கும் பகுதியில் வாழும் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியின மக்களின் எண்ணிக்கையை அளவீடுகளாகக் கொண்டு, பள்ளிகளை அதன் அடுத்த நிலைக்கு, அதாவது துவக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும். அந்தவகையில் உரிய ஆய்வு மேற்கொண்டு மாண்புமிகு முதல்வரின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, தேவையின் அடிப்படையில் உறுப்பினரின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றியைச் சொல்லி அமருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 180, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

180—

புதிய தேர்

***5637—திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை அருள்மிகு அழகிய ராஜமன்னார் இராஜகோபால சுவாமி திருக்கோயிலுக்குப் புதிய தேர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அருள்மிகு அழகிய ராஜமன்னார் இராஜகோபால சுவாமி திருக்கோயிலில் போதுமான நிதி வசதி இல்லை. எனவே, இத்தேரினை ரூ.28.25 இலட்சம் மதிப்பீட்டில் பிற திருக்கோயில்கள் நிதியின்மூலம் மராமத்து செய்து வெள்ளோட்டம் நடத்த மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பணிகள் முடிந்தபின் தேரோட்டம் நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

முற்பகல் 11–10

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாளையங்கோட்டை தொகுதியில் பாளையங்கோட்டையில் நடுநாயகமாக அமைந்திருக்கிற வேதநாராயணா அழகிய ராஜமன்னார் இராஜகோபால சுவாமி திருக்கோயிலில் மூன்று ஆண்டுகளாகத் தேரோட்டம் நடைபெறவில்லை. அந்தத் தேர் பழுதடைந்து ஓட முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. இந்தக் கோயில் மிகப் பிரசித்திபெற்ற கோயிலாகும். கிட்டத்தட்ட 1,200 ஆண்டுகளுக்கு முன்னால் பாண்டிய மன்னரால் கட்டப்பட்டு, கிட்டத்தட்ட 500 ஆண்டுகாலமாக திருப்பணி நடைபெறாமல் இருந்த நிலையில், 3–4–2003 ஆம் நாள் இந்தச் சட்டமன்றப் பேரவையிலேயே திருப்பணி நடத்தப்பட வேண்டுமென்று நான் ஒரு கோரிக்கையை வைத்தேன். அந்தக் கோரிக்கையை ஏற்று, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால் 9–7–2009 அன்று திருப்பணி நடைபெற்று, இன்று கிட்டத்தட்ட 8 ஆண்டுகள் ஆகின்றன. அங்கே வருகிற பக்தர்கள் தங்களுடைய கோயிலில் தேர் இல்லை என்பதைப் பெரிய மனக்குறையாக நினைக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட கோயிலின் நிதியின் மூலமாகப் பழுதுபார்ப்பதாகச் சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரை

அந்தக் கோயிலில் நிதி இல்லை. ஒருவேளை உபயதாரர்களின் நிதியை வைத்து பழுதுபார்க்கலாம் என்று சொல்லியிருப்பார் என்று நான் கருதுகிறேன். அப்படியே இருந்தாலும்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற கணக்கின்படி பழுதுபார்ப்பதற்கு மட்டுமே ரூ.28.75 இலட்சம் ஆகிறது. புதிதாக ஒரு தேர் அமைக்கப்படுமேயானால் கிட்டத்தட்ட கூடுதலாக 10 இலட்சம் ரூபாய் ஆகும். ஆகவே, இந்த அரசு நினைத்தால், அரசு நிதியைக் கொடுத்தால், மீதித் தொகையை உபயதாரர்களிடம் பெற்று, அங்கு புதிய தேரை அமைப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து, புதிய தேரை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தைத் தங்கள் வாயிலாக ஈர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதன் அடிப்படையில், அந்தக் கோயிலில் ஏற்கெனவே நிதி வசதி இல்லாத காரணத்தால் வேறு ஒரு திருக்கோயில் நிதியிலிருந்துதான் திருத்தேர் செப்பனிடப்பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் donors மூலமாக அந்தத் தேரைப் பழுதுபார்க்கக் கோரியுள்ளார்கள். அந்த அடிப்படையில் உபயதாரர்கள் முன்வந்தால் புதிய தேர் செய்து, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் வெள்ளோட்டம் செய்துகொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்கள்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நிகழ்வுகள் இயற்கையாகவே நடைபெறுகின்றன. இந்தக் கோயில் திருப்பணி சம்பந்தமாகக் கேள்வியைக் கேட்டவன் நான். அந்தத் திருப்பணி முடிந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில். இன்று எட்டு ஆண்டுகள் நிறைவடைந்து, எட்டாவது ஆண்டு வருசா அபிசேகம் இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேவேளையில், அந்தக் கோயிலுக்குத் தேரைக் கேட்க எனக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உபயதாரர்கள் நிதியைப் பற்றிச் சொன்னார்கள்.

அங்கே உபயதாரர்களிடமிருந்து நிதியை வாங்க முடியும். அரசு நிதி ஓரளவிற்குக் கொடுத்தால், மீதித் தொகையை உபயதாரர்கள் கொடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கு முன்பாக தி.மு.க. ஆட்சிக்காலத்தில் இதுபோன்று கோயில் திருத்தேர்களைச் செய்வதற்காக நிதி ஒதுக்கப்பட்டு, திருத்தேர்கள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாளையங்கோட்டை தொகுதியைப் பொறுத்தவரையில், அது ஒரு மதநல்லிணக்கமான தொகுதி. இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறித்துவர்கள் அனைவரும் ஓரளவிற்குச் சம அளவில் வசிக்கக்கூடிய பகுதியாகும். ஆகவே, ஒரு மத நல்லிணக்க நோக்கோடு, இந்தத் திருத்தேரைப் புதிதாக அமைத்துக் கொடுப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதில் அக்கறை எடுத்துக்கொள்வது மட்டுமல்லாமல், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அதிலே அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில், அதாவது, 2006 முதல் 2011 வரையிலான ஆட்சிக் காலத்தில் 16 திருத்தேர்கள் மட்டும்தான் செப்பனிடப்பட்டு தமிழகத்தில் தேரோட்டம் நடைபெற்றுள்ளன. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் கடந்த ஆறு ஆண்டுகளில் 169 திருத்தேர்கள் செப்பனிடப்பட்டு, ரூ.21.62 கோடி நிதியில் சீரமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) அதனடிப்படையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையினைப் பெற்று, புதிய தேரோட்டம் நடத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. அலெக்சாண்டர் அவர்கள்.

2017 ஜூலை 11]

திரு. வீ. அலெக்சாண்டர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர், நாங்கள் தினந்தோறும் எங்களின் இதயங்களிலே பூஜை செய்யும் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். என்னுடைய அம்பத்தூர் தொகுதியிலே இந்து சமய அறநிலையங்கள் துறைக்குச் சொந்தமான இடங்கள் மக்களுக்குக் குறைந்த தரை வாடகைக்கு விடப்பட்டுள்ளன. இன்று சந்தை மதிப்பை வைத்து, தரை வாடகை இந்து சமய மற்றும் அறநிலையத் துறையினால் பலமடங்கு உயர்த்தப்பட்டுள்ளது. அந்தத் தரை வாடகையை முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், புயல், மழை காரணமாக அங்குள்ள வீடுகளெல்லாம் பழுதடைந்து இருக்கின்றன. அவற்றையும் சரிசெய்வதற்கு அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது திருக்கோயில் இடங்களில் குடியிருப்போர்களுக்கு guideline value அல்லது தற்காலிக சந்தை மதிப்பு அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சென்று, பரிசீலனை செய்து, அந்த வாடகையைக் குறைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]